## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,நத்தம்

| | |
|---|---|
| அ.வ.எண். 19/2021 | வா.சா. 1 |
| பெயர் : குமார் | த/பெ. துரைசாமி |
| தாலுகா : நத்தம் | கிராமம் : உலுப்பகுடி |
| தேதி : 04.09.2024 | வயது : 50/2024 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :
சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 12:05 P.M. - 12:20 P.M.

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் 2ம் வாதி ஆவேன் . நான் இவ்வழக்கை பிரதிவாதிக்கெதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் . எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் நன்கு தெரியும் . நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன் . அதில் உள்ள சங்கதிகளை வாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொண்டு அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை வாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யவேண்டுகிறேன்.

வா.சா.ஆ. 1 - 1996 – 1997 முதல் 2000-2001 வரையிலான வழக்கு சொத்துக்கு 2ம் வாதி பெயரில் கதவு எண் .1/108A வில் உள்ள வீட்டிற்கு ஏற்பட்ட வீட்டு வரி ரசீதுகள் - அசல் (எண்ணிக்கை 4)

வா.சா.ஆ.2 - 2002 – 2003 முதல் 2020 - 2021 வரையிலான வழக்கு சொத்துக்கு 2ம் வாதி பெயரில் கதவு எண் .1/122 ல் உள்ள வீட்டிற்கு ஏற்பட்ட வீட்டு வரி ரசீதுகள் - அசல் (எண்ணிக்கை 13)

வா.சா.ஆ.3 - 02.08.2010 மற்றும் 14.03.2011 தேதியிட்ட வழக்கு சொத்துக்கு 2ம் வாதி பெயரில் ஏற்பட்ட குடிநீர் இணைப்பு கட்டண ரசீது - அசல் (எண்ணிக்கை 2) (இணைப்பு எண்.247)

வா.சா.ஆ.4 - 12.08.2011 முதல் 19.02.2020 வரையிலான தேதியிட்ட வழக்கு சொத்துக்கு 2 ம் வாதி பெயரில் ஏற்பட்ட குடிநீர் இணைப்பு கட்டண ரசீதுகள் - அசல் (எண்ணிக்கை 8) (இணைப்பு எண்.264)

வா.சா.ஆ.5 – 14.06.2016 தேதியிட்ட வழக்கு சொத்திற்கு 2 ம் வாதி பெயரில் ஏற்பட்ட மின் கட்டண ரசீது - அசல் (எண்ணிக்கை 1) (மின் இணைப்பு எண்.1215)

வா.சா.ஆ.6 – 29.10.2020 தேதியிட்ட வழக்கு சொத்திற்கு 2 ம் வாதி பெயரில் 04.06.2011 முதல் 08.10.2020 தேதி வரை செலுத்தப்பட்ட மின் இணைப்பு எண் .1215 க்கான கட்டண விபரம் இணைய நகல்

வா.சா.ஆ.7 – 12.03.2002 தேதியிட்ட பிரதிவாதியின் சொத்துக்கு பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது - அசல் (மின் இணைப்பு எண்.441)

வா.சா.ஆ.8 – 1 ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை - அசலுடன் ஒப்பிடப்பட்டது.

வா.சா.ஆ.9 – 2 ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை - அசலுடன் ஒப்பிடப்பட்டது.

வா.சா.ஆ.10 - 2005-2009 காலத்திற்கான வாதிகளின் பழைய குடும்ப அட்டை - அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது.

வா.சா.ஆ.11 – 2017 ம் வருடம் வழங்கப்பட்ட 2 ம் வாதியின் குடும்ப அட்டை - அசலுடன் ஒப்பிடப்பட்டது.

வா.சா.ஆ.12 – 25.11.2020 தேதியிட்ட 1 ம் வாதி பெயருக்கு வழங்கப்பட்ட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை தமிழ்நாடு மின் அணு அட்டை விபரங்கள் - இணைய நகல்

வா.சா.ஆ.13 – 16.12.2020 தேதியிட்ட 1 ம் வாதியின் கணவர் துரைச்சாமி பெயரில் உள்ள வழக்கு சொத்து அல்லாத வேறு சொத்துக்களுக்கான பட்டா - இணைய நகல் (பட்டா எண்.934)

வா.சா.ஆ.14 – 11.11.2020 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் புல எண்.810/3 க்கு ஏற்பட்டுள்ள சிட்டா உண்மை நகல் (பட்டா எண்.584)

வா.சா.ஆ.15 – 03.11.2020 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் புல எண் .810/3 க்கு ஏற்பட்டுள்ள

அடங்கல் உண்மை நகல் (பட்டா எண்.584)

வா.சா.ஆ.16 – 01.03.2021 தேதியிட்ட 2 ம் வாதி நத்தம் வட்டாட்சியருக்கு பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்ய கொடுத்த மனு கை நகல்

மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04.09.2024 கையெழுத்து செய்துள்ளார்.

V. UDAYA SURIYA

Digitally signed by V. UDAYA SURIYA
Date: 2024.09.04 11:32:46 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்